மலர் 2 இதழ் 4 ஏப்ரல் 2018 ISSN: 2454-3993

# சங்க கால நாடக மகளிர் (ஆடற்மகளிர்)

***கி. மகாலட்சுமி***
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*நிகழ்கலைத்துறை*
*புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி*

***முனைவர் மு. சுப்பையா***
*உதவிப் பேராசிரியர்*
*நிகழ்கலைத்துறை*
*புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி*

சங்கம் வைத்து உலகிற்குக் கலைகளை வளர்த்தவர்கள் நம் தமிழர்கள் என்பது உலகம் அறிந்த உண்மையாகும். இவற்றைப்பற்றிச். சங்ககால நூல்களானத் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், இறையனார் களவியல், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை,பரதநாட்டியசாஸ்திரம் இன்னும் பிற நூல்கள் கலைகளின் இருப்பிடத்தையும், கலைஞர்களின் வாழ்வியல் முறைகளையும் நமக்குப் படம்பிடித்தாற் போலக் காட்டுகின்றன. அதிலும் குறிப்பாக ஆற்றுப்படை நூல்கள் நாடக மகளிரைப் பற்றியும், அவர்களின் வாழ்வியலைப் பற்றியும் அதிகம் பேசுகின்றன.

சங்க காலங்களில் பாணர், கூத்தர், துணங்கையர், விறலியர், பாடினியர், கண்ணுளர், வயிரியர், கோடியர் என பலபிரிவினர் கலைத் தொழில் செய்து வாழ்ந்துள்ளனர். பாணர்கள் பாட்டுப் புணைந்தும், யாழ் இசைத்துக் கொண்டும், அவர்களின் துணையினர்களான துணைக்கியர், விறலியர் போன்றவர்கள் ஆட்டம் மற்றும் கூத்துக்களை நிகழ்த்தியுள்ளனர். சங்ககால மன்னர்களின் அவைகளில் பாணர்கள் பாடிட விறலியர்கள் ஆடிடவும் அவைக்களம் நிகழ்ந்துள்ளது. இவை மட்டுமின்றி போர்களங்களிலும் பாணர்கள் பாடும்தொழிலையும் மேற்கொண்டுள்ளனர்.சங்க காலங்களில் இவர்களுடன் சேர்ந்து குறுநில மன்னர்களும் இக்கலைஞர்களுடன் சேர்ந்து ஆடியும், பாடியும் அவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கியும் மகிழ்ந்தும் வந்துள்ளனர்.கலை இணைந்த வாழ்க்கையாகச் சங்ககாலச் சமூகவாழ்வு விளங்கியுள்ளது.

## நாட்டியசாத்திரம் சுட்டும் நாடக மகளிர்

பரதரின் நாட்டிய சாஸ்திரம் ஒரு நாடகவியல் நூலாகும். நாட்டியம் என்ற சொல் வடமொழியில் நாடகத்தையும், ஆக்கத்தையும் குறிக்கின்றது. நாட்டிய சாத்திரம் என்னும் இன்னூல் நாடக ஆசிரியரான கவிஞனின் படைப்பாக்கத் திறனையும், நடிகரின் மெய்பாட்டுத்திறனையும், இந்த இருவருக்கும் உள்ள கலைக்கோட்டுப்பாடுகளையும் கூறுவதாக அமைந்துள்ளது. நாடகத்தையே ஆடல்கலை என்பது பரதரின் கோட்பாடாகும். இவற்றிற்கு அடித்தளமாக உள்ள மொழி, யாப்பு, அணி, ஆடல், பாடல், இசை, இலக்கணங்கள் குறித்துப் பரதர் இந்நூலில் தனித்தனி இயலில் கூறியுள்ளார். காவியங்களில் பரதரைப்பற்றிய குறிப்புகள் இல்லை என்றாலும். நாடகங்களில் இவரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. காளிதாசரின் விக்கிரம ஊர்வசிய நாடகத்தில் நாட்டிய சாத்திரத்தின் ஆசிரியர் என்றும், புகழ்மிக்க நாடகக் குழுவின் இயக்குனர் என்றும் குறிக்கப்பெற்றுள்ளன.

பரதரின் நாடடிய சாஸ்திரத்தில் ஆடல் மகளிராக அஸ்டநாயகிகள் இடம் பெற்றுள்ளனர்.

1. சுவாதினபதிகா
2. வாசகசஜ்ஜிகா
3. புரோஷித்தபர்த்துருகா
4. விப்பரலப்தா
5. விரகேஹாத்சண்டிதா
6. கண்டிதா
7. கலாஹான் தரிதா
8. அபிசாரிகா ஆகியோர் ஆவர்.

இவர்களே முக்கிய நாயகிகளாகக் கருதப்படுகிறார்கள். இவர்களைப் போன்ற ஒத்தநாயகிகளை சிலப்பதிகாரத்தில் "எண்வகைவரிக்கூத்தில்" காணமுடிகின்றது.

**தொல்காப்பியம் கூறும் நாடகச்சுவை**

சுவைகள் நாடகத்திற்கு இன்றியமையாதவை ஆகும். தமிழ் நாடக இலக்கண நூல்களும் சுவைகளைப் பற்றிக்கூறியுள்ளன. தொல்காப்பியரும் நாடகச்சுவைகளானவற்றை எண்வகை மெய்ப்பாடாக மெய்ப்பாட்டியலில் கூறியுள்ளார். இதனை,

> **"நகையே யழுகை விளிவரன் மருட்கை**
> **அச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்**
> **றப்பா லெட்டும் மெய்பாடென்ப" (தொல்-மெய்பாடு-3)**

என்னும் நூற்பாவால் எட்டுவகை மெய்பாடுகளையும், அவை தோன்றுவதற்கான காரணங்களையும் விளக்கியுள்ளார், இவற்றைப் பற்றிச் சுருங்கச் சொன்னால்,

1. வீரம் - என்பது மாற்றாரை (பகைவரை) குறித்து நிகழ்வது.
2. அச்சம் - என்பது பயத்தினால் நிகழ்வது.
3. இழிப்பு – என்பது இழிக்கத்தக்கன கண்டு நிகழ்வது.
4. வியப்பு – வியக்கத்தக்க கண்டு நிகழ்வது. வியப்பு என்றாலும் அற்புதம் என்றாலும் ஒன்றாகும்.
5. காமம் - என்பது இன்ப நிகழ்ச்சியால் நிகழ்வது. காமம் என்றாலும், சிருங்காரம் என்றாலும் ஒன்றாகும்.
6. அவலம் - என்பது இழிவு பற்றி பிறப்பது. அவலம் அல்லது கருனை என்பது ஒன்றாகும்.
7. உருத்திரம் - என்பது அவமதிப்பால் பிறப்பது. உருத்திரம் அல்லது வெகுளி, சினம் என்பதும் ஒன்றாகும்.
8. நகை – என்பது இகழ்ச்சி முதலானவற்றில் பிறப்பது. இவையே தொல்காப்பியர் கூறும் எட்டு வகையான மெய்பாடுகள் ஆகும்.

தொல்காப்பியத்திற்கு உரைஎழுதிய பேராசிரியர் நாடகமகளிரைப் பற்றிக்கூறியுள்ளார். "கெடவரல் பண்னை ஆயிரண்டும்விளையாட்டு" எனக் கூறியுள்ளார். இதில் கெடவரல் ஆயம், பண்னை எனக்குறித்தவை எல்லாம் மகளிர் குழுக்களைப் பற்றியதே. மறைந்தும் திரிந்தும் பண்பட இயற்றியும் மகளிர் ஆயம் ஆடுவன எல்லாம் விளையாட்டு என்பது இதன் பொருள் ஆகும்.

**பேராசிரியரின் தொல்காப்பிய உரை வரிகள்**

ஆடலிலும், பாடலிலும் சிறந்து விளங்கக்கூடிய நாடக மகளிரின் இன்ப நுகழ்ச்சியில் புலப்படும் இன்ப வேறுபாட்டை முப்பத்தி இரண்டாக எண்ணினார் நாடக நூலார்.

> **"முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும்**
> **முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும்**
> **பாடலும் கண்டும் கேட்டும் காமங்கரும்**
> **இன்பவிளையாட்டினுள் தோன்றிய முப்பத்**
> **திரண்டு பொருளும் அவை கருதிய பொருட்பகுதி**
> **பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்கு" (தொல்-உரை விளக்கம்)**

எனப் பேராசிரியரின் உரைவரிகள் கூறுகின்றன. பரதர் மெய்பாட்டை ஒரு நாடகப் பண்பாகப் காட்டியிருக்கத் தொல்காப்பியர் இதனை ஒரு நாடக இலக்கியப் பண்பாக காட்டியுள்ளார்.

> **"பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்**
> **உணர்ச்சிவாயில் உணர்வோர் வலித்தே**
> **கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
> **உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
> **நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே" (தொல்-பொருளதிகாரம்-பேராசிரியம் 275)**

என்பன போலும் நூற்பாக்கள் இலக்கியக் கலையைப் போலவே நாடகக்கலையோடு பொருத்தி எண்ணுதற்குரியன. பண்டைத் தமிழ் இலக்கியத்துள்ளும் நாடகத்தன்மை செழித்திருக்க

வடமொழியில் நாடகத்தின் இலக்கியத் தன்மை செறிந்து இருந்தது எனலாம். தொல்காப்பியர் கி.மு. 3-ம் நூற்றாண்டு என்பது அறிஞர்கள் பலரும் கூறும் உடன்பாடாகும். ஆகவே அவர் பரதருக்கு முற்பட்டவர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. (400AD Keith Skt.P.32)

**நாடக நூல்களின் அறியலாகும் நாடக மகளிரின் மெய்ப்பாடுகள்**

அடியார்க்குநல்லார் சிலப்பதிகார உரைபாயிரத்தில் வழக்கத்தில் இருந்து வந்த பல தொண்மையான நாடக நூல்களைப்பற்றி கூறுகின்றார். பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம் முதலியான தொன்மையான நூல்கள் நமக்குக் கிடைக்கப்பெறமாலேயே போயின. இந்த நூல்கள் இருந்தமைக்கான குறிப்புகளை அறியமுடிகின்றது. மற்ற நூல்களான பரதம், அகத்தியம் போன்ற நூல்களும் இறந்தன. பின்னர் முருவம், சயந்தம், குணநூல், செயிற்றியம் போன்ற நூல்களில் இருந்த முதல் பகுதியும், இறுதி பகுதியும் மட்டுமே கிடைத்தன. நடுமையான பகுதி கிடைக்கப் பெறாததால் அவையும், இறந்து போயின என்ற செய்தி சிலப்பதிகார அடியார்க்குநல்லார் உரைப்பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாடக நூல்கள் என்று காட்டப்பெறுவனவற்றுள் செயிற்றியமே உரை ஆசிரியர்கள் பலராலும் மேற்கோளாக காட்டப் பெறுகின்றது.

**“எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென**
**நுண்ணுதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப”**

பேராசிரியர் சுவை, குறிப்பு, சத்துவம் என்ற மூன்று கூறுபட மெய்ப்பாட்டைக் கூறும் போது செயிற்றியனார் இந்த வரிகளைக் காட்டுகின்றார். ***“இருவகை நிலத்தின் இயல்வது சுவையே”*** என்ற செயிற்றியனார் நூற்பாவும் காட்டப் பெறுகின்றது.

**“சத்துவம் என்பது சாற்றுங்காலை**
**மெய்ம்மயிர் குளித்ததல் கண்ணீர் வார்தல்**
**நடுங்கக் கடுத்தல் வியர்த்தல் தேற்றம்**
**கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த**
**பத்தென மொழிய சத்துவந் தானே” – (தொல்-பொருள்-களம்பூரணம் நூற்பா 246).**

எனப் பத்துப் பண்புகளையும் செயிற்றியனார் கூறுவதை இளம்பூரணர், போராசிரியர் போன்றோர் மெய்பாட்டிற்கு உரைவகுக்க உற்றதுணையாய் அமைந்தன. மெய்பாட்டிற்கு போதிய விளக்கத்தைத் திணை நூற்பாக்களே வழங்குகின்றன. ***“உப்போன் செய்தது காண்போர்க் கெய்தல் மெய்பாடென்ப மெய்யுணர்ந்தோரே”*** என்ற செயிற்றியனார் நூற்பா மெய்பாடு என்ற நாடகக் கலைச் சொல்லுக்கு உரிய விளக்கத்தை அளிக்கின்றது.

**சங்க இலக்கியங்களில் ஆடல் மகளிர் மற்றும் ஆடற்கலை**

ஆடற்கலையைக் கூத்துக்கலை என்றும் கூறலாம். கூத்துக்கலை மிகவும் பழமையானது. ஆடற்கலைகளில் பல இந்த காலக்கட்டத்தில் மறைந்துவிட்டன. அவற்றைப் பற்றிய பழங்காலத்து நூல்களில் சில குறிப்புக்களைக் காண்கிறோம். மறைந்த பழமையான ஆடல்களில் பெயர் பெற்றவை 11-வகையான ஆடல்களாகும். மனிதர் ஆடிய இந்த ஆடல்களை ஆதிகாலத்தில் தெய்வங்கள் ஆடியதாகக் கருதப்பட்டதால், இந்த ஆடல்கள் ‘தெய்வவிருத்தி’ என்று பெயர் பெற்றன. தெய்வங்கள் அவ்வுணர்களுடன் போர்செய்து வென்று அவ்வெற்றியின் மகிழ்ச்சியினால் இந்த ஆடல்களை ஆடினார்கள் என்று கூறப்படுகிறது. அவையாவன:

1. அல்லியக் கூத்து
2. கொடுகொட்டியாடல்
3. குடையாடல்
4. குடக்கூத்து
5. பாண்டுரங்கம்
6. மல்லாடல்
7. துடிக்கூத்து
8. கடையக்கூத்து
9. பேடாடல்
10. மரக்காலாடல்
11. பாவைக் கூத்து ஆகியவை ஆகும்.

இவற்றில் முதல் ஆறு ஆடல்களும் நின்று ஆடுவது. பின் ஐந்து ஆடல்களும் விழ்ந்து ஆடுவது.

**அல்லியம் கொட்டி குடைகுடம் பாண்டரங்கம்**

**மல்லுடன் நின்றாடல் ஆறு**

**துடி கடையம் பேரு மரக்காலே பாவை**

**மடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து"** என்பதினில் இவற்றை அறியலாம்.

இந்த பதினொரு வகையான ஆடல்களையே சங்ககால ஆடல் மகளிரான நாடக மகளிரான மாதவி ஆடியுள்ளார்.

**மாதவியின் பதினொரு வகையான ஆடல்கள்**

- **அல்லியக்கூத்து–** கண்ணன் தன்னைக் கொல்லவந்த யானையுடன் போர்புரிந்து அதன் தந்தங்களை கய்யினால் பற்றி உடைத்து, அந்த யானையைக்கொன்று ஆடிய ஆடல் என்று மாதவியால் இந்திரவிழாவில் ஆடப்பட்டது என்று சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.
- **கொடுகொட்டி–** சிவபெருமான் அசுரர்களின் முப்புரத்தை எரித்தப்போது அது எரிமூண்டு எரிவதைக் கண்டு வெற்றி மகிழ்ச்சியினாலேயே கைக்கொட்டி நின்று ஆடிய ஆடல் இது.
- **குடைக்கூத்து** - இது முருகன் அசுரர்களை வென்றபோது ஆடிய ஆடல்.
- **குடக்கூத்து–** கண்ணனின் பேரனாகிய அனிருத்தனை அசுரர்கள் சிறை வைத்தபொழுது, அவனை சிறை மீட்பதற்காக கண்ணன் குடங்களைக் கொண்டு ஆடியது இக்கூத்து.
- **பாண்டரங்கம்** - சிவபெருமான் திரிபுரத்தை எரித்து பிறகு அவரின் தேர்ப்பாகனான நான்முகன் காண ஆடியது பாண்டரங்கக் கூத்து.
- **மல்லாடல்** - கண்ணன் வாணன் என்னும் அசுரனை மற்போர் செய்து அவனை கொன்றதைக் காட்டும் கூத்து.
- **கடையக்கூத்து–** வாடனுடைய சோ என்னும் நகரத்தில் இந்திரனின் மனைவியாகிய இந்திராணி உழத்தி உருவத்தோடு ஆடிய உழத்திக் கூத்து இது.
- **பேடாடல்** - பேடு அல்லது பேடாடல் என்பது காமன் தன்னுடைய மகன் அனிருத்தனை சிறை மீட்பதற்காக வாடனின் சோ நகரத்தில் சென்று பேடி உருவம் கொண்டு ஆடிய ஆடல்.
- **மரக்கால் ஆடல்** - கொற்றவை முன் நேராகப் போர் செய்ய அசுரர் வஞ்சனையால் வெல்லக் கருதிப் பாம்பு, தேள் முதலியவற்றைப் புகலிட அவற்றைக் கொற்றவை மரக்காலினால் உழக்கி ஆடிய ஆடல்.
- **பாவைக் கூத்து–** போர் செய்வதற்குப் போர்க் கோலங்கொண்டு வந்த அசுரரை மோகித்து விழுந்து இறக்கும்படி ஆடிய கூத்து இது.

1800 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த 11-வகையான ஆடல்களையும் அந்தந்தப்பாத்திரத்தின் ஆடை அணிகளை அணிந்து, மாதவி மேடைமேல் ஆடினாள். என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இந்த 11-வகையான ஆடல்களைத் தவிர்த்து சிலவகைக் குரவைக் கூத்துக்களும் ஆடப்பட்டன. குரவைக் கூத்தை மகளிர் ஆடினார்கள்.

"*குரவை என்பது எழுவர்மங்கையர், செஞ்நிலை மண்டலக் கடக்கைகோத், தன்நிலைக் கொட்பாரின் எழுவர், ஒன்பதின்மர் மகளிர் வட்டமாக நின்று கைக்கோர்த்து ஆடுவது குரவைக் கூத்தாடலாகும்."*

பரதநாட்டியம் - இதனை 'சதிராட்டம்' என்றே முன்னர் அழைத்தனர்.

தேவதாசிகள் என்றும் தேவரடியார்கள் என்றும் பெயர்பெற்ற ஆடல்மகளிர், பரத நாட்டியக்கலையைப் பயின்று, கோயில்களிலும் பிற இடங்களிலும் ஆடினார்கள். அக்காலத்தில் அவர்களைத் தவிர ஏனையோர் பரதநாட்டியம் ஆடவதில்லை. கோயில்களில் தேவதாசிகள் கூடாது என்று சட்டம் வந்த பிறகு, பரத நாட்டியக்கலையை 'உயர்சாதி' என்று சொல்லிக் கொண்டவர்கள் அவர்களின் மகளிர்க்கு கற்பித்து ஆடி வருகின்றனர். இக்கலை மட்டுமே சிறப்படைந்து உயரிய இடத்தில் இருந்து வருகின்றது.

**நாடக மகளிர்க்கு வழங்கிய பட்டங்கள்**

கூத்துக்கலை பயின்று தேர்ச்சி பெற்ற **"நாடக மகளிர் தலைக்கோலி"** என்னும் பட்டத்தைப் பெற்றார்கள். அவர்களுக்கு **தலைக்கோல் அரிவை** என்றும் பெயர் உண்டு. ஆடல் ஆசிரியர் **தலைக்கோல் ஆசான்** என்னும் பட்டம் பெற்றனர். கூத்துக்கலையை ஆடி முதிர்ந்த மகளிர் **தோரிய மடந்தை** என்னும் **தலைக்கோல் அரிவையர்** என்றும் பெயர் பெற்றனர்.

தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு ஆடற்கலையில் தேர்ந்த தலைக்கோலிகள் பற்பலர் இருந்தார்கள். அவர்களுடைய பெயர்களும் வரலாறுகளும் தொடர்ந்து கிடைக்கவில்லை. கடைச்சங்க காலத்தில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தவள் பெயர் பெற்ற மாதவி என்பவள். அவள் பாடற் ஆடற்கலைகளில் தேர்ச்சிபெற்று அரங்கேறியபோது, சோழன் கரிகால் வளவன் அவளுக்கு 1008 கழஞ்சுபொன் மதிப்புள்ள பொன்மாலையையும் தலைக்கோலி என்னும் பட்டத்தையும் கொடுத்துச் சிறப்புச் செய்தான் என்று சிலப்பதிகார காவியம் கூறுகிறது.

ஆடற் கலையில் தேர்ந்த ஒருத்தி ஐஞ்ஞூற்றுத் தலைக்கோலி என்று பெயர் பெற்றிருந்தாள்.

கூத்துக்கலையைப் பற்றிப் பல கலைநூல்கள் இருந்தன. அவற்றில் பல இப்போது மறைந்துவிட்டன. அந்நூல்களில் சில அவை: பரதசேனாபதியம், செயற்றியம், சயந்தம், விளக்கத்தனார் கூத்து, மதிவாணானர் நாடகத் தமிழ் நூல், செயன்முறை, குணநூல், கூத்த நூல், பரதம், முறுவல் நூல், பொய்கையார் நூல் முதலியவை.

சங்க இலக்கியங்கள் ஆடற்கலை குறித்து பல நுண்கருத்துகளை வழங்குகிறது. ஆடலுக்கு தாளமும் கருவி இசையும் இன்றியமைந்தன.

**"ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்**
**தன்மையில் திரிந்த இன்குரல் தீந்தொடை**
**கொம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்**
**கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப" (நெடுநல்வாடை 67-70).**

என நக்கீரர் பேசுவது கருதத்தக்கது. உடல் சூட்டால் ஆடுமகள் யாழின் நரம்புகளை சமநிலை எய்துவிக்கின்றாள். ஊருதோறும் அக்காலத்தில் விழா நடத்தல் இயல்பு. அவ்விழாவிற்கு வருகையை கருதி பாணர், பொருநர், விரலியர் கூட்டமாக செல்லுவர். தெருவிலும் பொதுமன்றத்திலும் ஆடல் நிகழும்.

ஆடற்கலைவல்ல விறலி அக்கால இசைகுழுவின் இன்றியமையா உறுப்பாவாள். ஆடலோடு பாடல் பாட வல்லவள், அழகமைந்தவள் இவளுடைய தோற்றம் பற்றி சிறுபாணாற்றுபடையும், பொருநாற்றுப் படையும் எடுத்துரைக்கின்றன.

**"பாடு விறலியர் பால்பிடி பெறுக"** என்று பதிற்றுப்பத்தில் இவளுடைய பாடுதிறனும்,

**"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த**
**ஓழியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்**
**கற்றுத் துறைபோகிய பொற்பொடி நங்கை" (பதிற்றுப்பத்து 37:22 மணிமேகலை:2:31-32).**

என்ற மணிமேகலையால் ஓவிய முதலான பிற கலைகளிலும் இவளின் அறிவு சார்ந்த திறமும் அறியப்பெறும். ஆடல் மகளிர் அழகு அவ்வப்போது நாடாள்பரை அசைத்தது என்பது ஒருதலை,

**"கூடன் மகளிர் ஆடல் தோற்றமும்**
**பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்**
**காவலன் உள்ளங் கவர்ந்தன வென்றுதன்" (சிலப்பதிகாரம் 16: 131-133).**

கூடிய உள்ளம் புலம்பியவாறு கோப்பெருந்தேவி சென்றனள் என்பார் இளங்கோ, அரும்பதவுரைகாரர், "அரசனுக்கு ஆடிப்பாடினாருள் ஒருத்திமேல் உள்ளஞ் சென்றுதென்று தேவி வாடி நீங்க" என உரை காட்டுவர்.

ஆடவரை வருணிக்கப் புகுந்தார் தோளும் மார்பும் தடக்கையும் கூறியதோடு நின்றனராக மகளிரை வருணித்தார் தலை முதல் தாளிறாகக் கூறினர். இவ்வருணனைக்கு ஆடல் சான்ற விறலியரே ஆட்பட்டனர். இதுவே பெண்ணினத்தை இழிவு படுத்தியதின் தொடக்கம். இதன் பரிணாமம் இன்று விளம்பரச் சுவரொட்டிகளில் பெண்ணின் மானம் சூறையாடப் படுவதாய் வளர்ந்துள்ளது.

**"மடக்கண் தகரக் கூந்தல் பணைத்தோள்**
**வளர்ந்த வாவெயிற்றுச் சேர்ந்துசெறி குறங்கின்**
**பிணையல் அந்தழை தைஇத் துணையிலள்**
**விழவுக் களம்பொலிய வந்து நின்றனளே**
**எழுமினோ எழுமின் எங்கொழுநற் காக்ககம்**
**ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்**
**பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது**
**ஒருவேற் கொடி யாங்குநம்**
**பன்மையை தெவனோ இவள்வன்மை தலைப்படினே" (நற்றிணை 170).**

என்ற நற்றிணை விறலியின் ஆடற்கலை வன்மை கூறியதென்பதினும் அவளால் அலமரலுற்ற குடிமை கூறிற்று.

கோயில் தோறும் ஆடற்கலை நாள் நிகழ்ச்சியாக நடந்தமையைப் பண்டை இலக்கியங்கள் காட்டுகின்றன.

**"பாடுவார் பாணிச்சீரும் ஆடுவார் அரங்கத் தாளமும்**
**மஞ்சாடு மலைமுழுக்கும்**
**துஞ்சாக் கம்பலை" (பரிபாடல் 109-111)**

எனப் பரங்குன்றில் பாடலோடு ஆடல் நிகழ்ந்தமையினைப் பரிபாடல் காட்டுகின்றது.

**வெறியாட்டு**

முருகு மெய்ச்சிலிர்க்க வேலன் ஆடும் ஆட்டம் வெறியாட்டு எனப்பெறும். குறிஞ்சி நில மக்கள் வென்றி வேண்டி ஆடும் வெறியாட்டு காந்தள் எனப்பெற்றுப் புறத்திணைப் பாற்படும். இவ்வேலனோடே குறமகளாகிய தேவராட்டியும் வெறி நிகழ்த்துதல் உண்டு. இவள் சாலினி எனப்படுவாள். சிலப்பதிகார வேட்டுவரியில்,

**"வழங்குவிற் றடக்கை மறக்குடித் தாயத்தப்**
**பழங்கூட னுற்ற முழுங்குவாய்ச் சாலினி**
**தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்துக்**
**கையெடுத் தோச்சிக் கானவர் வியப்பு"** (வேட்டுவரி 6-9) ஆடினன் என்பர்.

**ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்**

பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்துக்குரிய தலைவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். இவன் ஆடற்கலை விருப்பும் தேர்ச்சியும் உடையவன் என்பதால் பற்றி ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனக் குறிக்கப்பட்டான் என்பர். ஆனால் பதிகத்தில் தண்டகாரணியத்துக் கோட்டவருமையைத் தொண்டியன் தந்து என்று காணப்பெறும் தொடராலும், இவ்வழிகளில் தலைவன் பெயர்க்காரணம் அமைந்துள்ளது என்று உரைப்பகுதியாலும் இவன் மலையாடுகளை மீட்ட பெருமை பற்றி அப்பெயர் எய்திருக்கக் கூடுமென அறியப்பெறும். ஆயினும் இவன் ஆடற்கலை விருப்பமுடையவன் என்பதில் ஐயமில்லை. இவன் விறலியர் ஆடிடத்து மனஞ்சாய்ந்து பகை மறந்திருந்தான் என்பது பற்றி கூறுகையில்,

**"சுடர்நுதர் மடநோக்கின்**
**வாணகை யிலங்கெயிற்று**
**அமிழ்துபொதி துவர்வாய் அசைநடை விறலியர்**
**பாடல் சான்று நீடினை யுறைதலின்**
**வெள்வேல் அண்ணல் மெல்லியல் மோன்ம் என" (பதிற்றுபத்து 51. பா. 19-23)**

உள்ளுவர் பகைவர் என்றுரைக்கின்றார் நச்செள்ளையார்.

**முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉவப்புணை யாகச்**
**சிலைப்புவல் லேற்றிற் றலைக்கை தந்துநீ**
**நளிந்தனை வருத லுடன்றன ளாகி" (பதிற்றுபத்து 52பா 14-16)**

என ஆடல்மகளிர் நெருக்கத்தான் விளைந்த ஊடல் காட்டுவர். மகளிர் ஆடும் துணங்கைக் கூத்திற்குத் தலைக்கை அளித்துத் தானும் ஆடினன் கோன். இதுபோன்ற பல்வேறான சான்றுகளை சங்க இலக்கியங்களில் நம்மால் அறியமுடிகின்றது.

**நாடக கலைஞர்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைகள்:**

சங்க காலத்தில் கலைஞர்களுக்கு உயர்பிக்கும் வகையில் பொன் பொருள் அல்லாமல், ஊர்கள், குலங்கள், ஏரிகள், மலை, பொன்னால் செய்யப்பட்ட தேங்காய்கள் இன்னும் பிற வகையும் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் காணப்படும் ஊர்ப்பெயர்கள் பலவற்றின் வழியாகச் சங்க காலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கலை மற்றும் கலைஞர்கள் குறித்த செய்திகளை நம்மால் அறிய முடிகின்றது. திருச்சியில் இருந்து மதுரை செல்லும் வழியில் உள்ள விராலிமலை என்பது விறலியரை நினைவு படுத்துவதாக உள்ளது. விறலியர்கள் குடியிருந்த பகுதியாக விறாலிமலை இருந்திருக்கின்றது என்பதை நம்மால் உணரமுடிகின்றது. கூத்தாநல்லூர், கூத்தாண்டன், கூத்தலூர், கூத்தக்குடி, கூத்தன் குடி. கூத்தியார்குண்டு சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இந்த ஊர்ப் பெயர்கள் வழியாக கூத்தர்கள் குடியிருந்த பகுதியினை நம்மால் அறியமுடிகின்றது. அதே மாவட்டத்தில் உள்ள பரத்தவயல் என்னும் ஊர்ப்பெயரைப் பார்க்கும்பொழுது பரத்தையருக்கு எழுதிவைக்கப்பட்ட நிலம் என நம்மால் உணர முடிகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பணகுடி என்பது பாணன்குடி என்பதில் இருந்து மருவி வந்துள்ளது. இது பாணர்கள் வாழ்ந்த இடங்களை நினைவுபடுத்துகிறது. தேவரடியார் நத்தம் என்னும் ஊரைக்கொண்டு தேவதாசிகள் அங்கு வாழ்ந்ததை அறியமுடிகின்றது.

விறலி, பாணர், கூத்தர் என்னும் பொருள்தரத்தக்க ஊர்ப் பெயர்கள் வழியே பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்ட ஊர்ப்பெயர்கள் பல அழிந்தும், சிதைந்தும் போனவற்றின் அடையாளங்களாகவே இவ்வூர்ப் பெயர்களின் வழியே கலைஞர்கள் பெற்றிருந்த மதிப்பு நிலைகளை உணர்ந்தறிய முடிகின்றது.

சங்ககால சமூகஅமைப்பில் பாணர்கள், விறலியர், கூத்தர், பாடினியர், கண்ணுளர், வயிறியர், பொருநர், துணங்கையர் போன்றோர் பங்கு என்பது தவிர்க்க இயலாத நிலையில் இயக்கம் பெற்றுள்ளது. சங்க நூல்களளானத் தொல்காப்பியம், காப்பியங்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற நூல்களின் வாயிலாக ஆடற்மகளிரே நாடக மகளிராக மாற்றம் பெறுகின்றனர் என்பதை தெளிவாக நம்மால் அறியமுடிகின்றது. சங்ககால ஆடல்மகளிர் வேந்தர்களின் நோக்கை ஈர்த்தனர் என்பதைப் பதிற்றுப்பத்தாலும் சிலம்பாலும் அறிகின்றோம். ஆடல், பாடல், அழகு என்ற மூன்றிலும் நிறைந்த இவர்கள் தம்கலை கண்டவிழிகள் அழகிலும் ஈடுபட்டமையான கலைநோக்கு தெரிகின்றது. சமூக அமைப்பில் கலைக்கும், இறைப்பணிக்கும் தம்மை ஆளாக்கிக்கொண்டு இவர்கள் வாழ்ந்துள்ளனர்.

**துணைநின்ற நூல்கள்**

1. சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும், முனைவர்.கு. வெ. பாலசுப்பிரமணியன்,
2. பயன்பாட்டுத் தளங்களில் பழந்தமிழர் கலைகள், கரு.அழ.குணசேகரன்,
3. வரலாற்றில் தேவதாசிகள், சி.எஸ்.முருகேசன்,
4. நுண் கலைகள், மயிலை சீனி.வேங்கடசாமி,
5. தமிழர் வளர்த்த அழகுகலைகள், மயிலை சீனி.வேங்கடசாமி,
6. பெண்ணியம் அகலமும் ஆழமும், பேராசிரியர் - இரா.பிரேமா,